Regn No.: TN/ARD/24/12-14 Regd. with Registrar of News Papers for India Regn.No.:TNTAM/2000/3795Licensed to post without pre-payment TN/PMG/WPP (CCR) 01/12-14

# சிற்பங்களில் உள்ள நுண்ணிய வேறுபாடுகளையும் சிற்பிகளின் உயரிய திறமைகளையும் கரு.தட்சணாமூர்த்தி நூலாக்கியுள்ளார்

## உளி எழுத்துக்கள் நூலை வெளியிட்டு ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா பாராட்டுரை




படத்தில் (உட்கார்ந்திருப்பவர்கள் - வலமிருந்து) : நூலாசிரியரின் தந்தை ஸ்தபதி எஸ்.கே.ஆச்சாரி, சீனந்தல் அடிகளார் ஆளுநர் டாக்டர் கே.ரோசய்யா, துணைவேந்தர் முனைவர் எம். திருமலை, நூலாசிரியர் கரு.தட்சணாமூர்த்தி; கடைசியில் பேசுகின்றவர் பிரணவ பாரதி.

சென்னையில் ஆளுநர் மாளிகையில் தர்பார் அரங்கில் 2014 மார்ச்சு 13ஆம் நாள் மாலை 5.30 மணி அளவில் கரு.தட்சிணாமூர்த்தி எழுதிய "உளி எழுத்துக்கள்" நூலின் வெளியீட்டு விழா நடைபெற்றது. தமிழக ஆளுநர் முனைவர் கே.ரோசய்யா விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டுச் சிறப்புரை நிகழ்த்தினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எம்.திருமலை நூலின் முதல் படியைப் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார். நூலாசிரியரின் தந்தை ஸ்தபதி எஸ்.கே.ஆச்சாரியும், சீனந்தல் அடிகளாரும் விழாவில் முன்னிலை வகித்துச் சிறப்பித்தனர். சிவகாசி பாலசுப்பிரமணியம் வரவேற்புரையும், பிரணவபாரதி நன்றியுரையும் கூறினர். நூலாசிரியர் கரு.தட்சணாமூர்த்தி ஏற்புரை கூறினார். நசெ.

### தமிழ்நாடு ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா நூலை வெளியிட்டு நிகழ்த்திய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு :

தொடக்கமாக நான் சிற்பங்களில் உள்ள நுண்ணிய வேறுபாடுகளையும் சிற்பிகளின் உயரிய திறமைகளையும் கரு.தட்சணாமூர்த்தி நூலாக எழுதியுள்ளதற்காக அவரைப் பாராட்டுகிறேன். இந்த மாலைப் பொழுதில் இந்த நூலை வெளியிட்டு உங்கள் முன் பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

சிற்பக் கலையின் வரலாற்றினை நாம் சிந்துவெளி நாகரிகத்தில் காணலாம். விலங்குகளின் சிற்பங்களைக் கொண்ட அசோகர் காலத்திய தூண்கள் அவருடைய அரசாட்சியின் ஆணைகளைக் கூறுகின்றன. கற்குகைகளும், ஒரே பாறையில் செதுக்கப்பட்டுள்ள மாமல்லபுரத்துக் கோவிலும் அதன் சிற்ப வேலைப்பாடுகளும் கட்டடக் கலையின் திறன்களையும் அதைச் செய்த புகழ்பெற்ற சிற்பிகளையும் நமக்குக் காட்டுகின்றன.

நாம் உயரிய பண்பாடு, பாரம்பரியம், மரபுச் செல்வம் முதலான சிறப்புக்குரிய நாட்டைச் சேர்ந்தவர்கள். கலையும் பண்பாடும் அனைத்து மதங்களையும் எல்லைகளையும் கடந்து மேம்பட்டு உள்ளன. நம்முடைய இலக்கியம், நாட்டியம், சிற்பம், கட்டடக் கலை முதலானவை நம்முடைய பழமைப் பெருமைகளையும் சிறப்புகளையும் பேசுகின்றன. இந்தியா பழமையான வரலாற்றையுடையது. அது மெய் சிலிர்க்கும் பண்பாட்டையும் கலைகளையும் பெற்றுள்ளது. நம்முடைய கலை, பண்பாடு, பாரம்பரியம் முதலானவற்றின் சிறப்புகளை வருங்காலத் தலைமுறைகளுக்கும் கொண்டு செல்ல வேண்டும்.

நூலாசிரியர் கரு.தட்சணாமூர்த்தி இந்நூலில் சிற்பிகளின் அன்றாடச் செயல்பாடுகள், பழங்காலப் பொறியியல், பழங்காலக் கட்டடக்கலை ஆகியவற்றின் மதிப்பு, பாரம்பரியக் கைவினைஞர்களின் சிற்பிகளின் கலைத்திறன்கள் முதலானவற்றை இந்நூலில் கூறியுள்ளது பாராட்டத்தக்கது.

தமிழில் எழுதப்பட்டுள்ள இந்த நூலின் ஆங்கிலச் சுருக்கத்தை நான் படித்தபோது நூலாசிரியர் நிகழ்காலக் கட்டடக் கலையினை பழங்காலக் கட்டடக் கலையுடன் தொடர்புபடுத்தி எழுதியிருப்பதைக் கண்டேன்.

பழங்கால மக்களின் பொறியியல் அறிவுத்திறனும் வியப்புக்குரிய கைவினைத் திறனின் மறைபுதிரும் இன்றைய நாளிலும் இன்னும் நமக்குப் பலவற்றைக் கற்றுக் கொடுத்து வருகின்றன. நாம் தொழிலுநுட்பத்தில் மேம்பட்ட காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் பழங்காலக் கலைப் படைப்புகள் வியப்புக்குரியதாகவும் ஒப்பிட முடியாதவைகளாகவும் உள்ளன. கப்பல் கட்டும் தொழிலில் நாம் பெற்றிருந்த அறிவையும் திறனையும் நூலாசிரியர் மாபெரும் கோயில்களிலும் அதன் கட்டுமானங்களிலும் உள்ள மரவேலைப்பாடுகளுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார். இவ்வாறு கடந்த காலக்கலையுடனும் கட்டடக் கலையுடனும் நூலாசிரியர் தெளிவாக ஒப்பிட்டுக் காட்டுவது பாராட்டுக்குரியதாகும். நம்முடைய பழங்காலக் கலைகளின் கட்டடக் கலையின் சிறப்புகளின் வடிவமாகப் பழங்காலக் கோவில்கள் இன்றும் விளங்குகின்றன. அவை நம் சிற்பிகளின் மாபெரும் கலைத்திறனைக் காட்டுகின்ற மாளிகைகளாக நிற்கின்றன.

தஞ்சையில் உள்ள பிரகதீசுவரர் கோயிலின் வியக்கத்தக்க கட்டமைப்பைப் பற்றியும் அதைக் கட்டிய சிற்பி குஞ்சரமல்லன் கலை, கட்டடக் கலை, கட்டுமான வடிவமைப்பு, பொறியியல் திறன் முதலானவற்றில் பெற்றிருந்த ஆழமான அறிவையும் நூலாசிரியர் விளக்குகிறார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தஞ்சை பெரிய கோயிலில் 85 டன் எடையுள்ள ஒரு பெரும் கல்லை 7 கிலோ மீட்டர் தொலைவுக்கு நகர்த்திச் சென்று கோபுரத்தின் மீது நிறுத்தியது நம்முடைய மாபெரும் செயல்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர்கள் தரையிலிருந்து கோபுரத்தின் உச்சி வரைக்கும் சாரம் அமைத்தார்கள். இது பாரம்பரியக் கட்டடக் கலைஞர்களின் திறனைத் தெளிவாகக் காட்டுகிறது. தஞ்சை பெரிய கோயிலில் உள்ள ஒவ்வொன்றும் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. சிற்பங்கள் அனைத்தும் பெரிய கற்களில் செதுக்கப்பட்டுள்ளன. கோயிலைச் சுற்றிலும் எங்கும் கற்பாறைகள் காணப்படவில்லை. பல கிலோ மீட்டர் தொலைவிலிருந்துதான் அவர்கள் பாறைகளை உடைத்துப் பெரும் கற்களைச் சிரமப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாபெரும் தூக்கும் எந்திரங்களும் நகர்த்தும் எந்திரங்களும் இல்லாத அந்தக் காலத்தில் அது மாபெரும் செயல் ஆகும்.

நூலாசிரியரும் ஸ்தபதியுமான கரு. தட்சணாமூர்த்தியையும் இந்த நூலை அவர் எழுதி வெளியிடுவதற்குத் துணை நின்ற அனைவரையும் நான் மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன்.

"**ஒவ்வொரு கல்லும் தன்னுள்ளே ஒரு சிலையை அடக்கிக் கொண்டுள்ளது. சிற்பியின் பணி அதைக் கண்டுபிடிப்பதாக உள்ளது**" என்னும் பாப்பிலோபிகாசோவின் சொற்களைக் கூறி, நான் என் உரையை நிறைவு செய்கிறேன். அனைவருக்கும் வாழ்த்துக்கள். வெல்க இந்தியா! இவ்வாறு ஆளுநர் கே.ரோசய்யா பேசினார்.

### துணைவேந்தர் முனைவர் எம். திருமலை பேசியது வருமாறு:

சிற்பி கரு.தட்சிணாமூர்த்தி படைப்பாளர் குடும்பத்தில் பிறந்து முறையான கல்வித்தகுதியை வளர்த்துக் கொண்டு ஆய்வுப் பணியையும் மேற்கொண்டு உளி எழுத்துக்கள் என்னும் சிறந்த தொரு நூலினை எழுதி வழங்குவதை எண்ணி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். தமிழகத்தில் மட்டுமின்றிப் பாரதத்தின் பல பகுதிகளிலும் இவருடைய கலைத் திறன்கள் பளிச்சிடுகின்றன. ஒரு சிறந்த படைப்பு பல ஆண்டுகளுடைய கருத்தரிப்புக்குப் பிறகுதான் வெளிவரும். இந்நூல் இவருடைய 30 ஆண்டுக்காலச் சிந்தனையில்-பட்டறிவில் எழுதப் பட்டுள்ளது. இந்தப் புத்தகம் சிற்பக் கலையினுடைய அரிய செய்திகளை வெளிப்படுத்துகிறது.

தமிழ்மொழியினுடைய தொன்மை எவ்வளோ அவ்வளவு தொன்மை நம் சிற்பக் கலைக்கும் உண்டு. இந்தச் சிற்பக் கலையிலே ஈடுபட்டுள்ள கலைஞர்களில் நம்முடைய சிற்பி தட்சணாமூர்த்தி மிக முக்கியமானவர். நமது நாட்டுக் கலைகள் மனிதனுடைய அகத்தையும் ஆன்மாவையும் நோக்கிய கலைகள். ஒரு சிற்பத்தைப் பார்க்கிறபோது அந்தச் சிற்பம் அது கல்லிலே வடிக்கப்பட்டிருந்தாலும் அது பேசும் சிற்பமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். பலவிதமான உணர்ச்சிகள் சிற்பியின் உளிபட்டு கல்லிலே வெளிப்படுகின்றபோதுதான் அது ஒரு சிற்பமாகிறது. நமது நாட்டின்

-3ம் பக்கம் பார்க்க

MAKKAL NENJAM Posted at Egmore RMS-1, Patrika Channel. 15th April 2014
பெறுநர் / To
திரு. / திருமதி. / செல்வி
முகவரியாளரிடம் சேர்க்க முடியாதபோது திருப்பி அனுப்ப வேண்டிய முகவரி :
மக்கள் நெஞ்சம் 4 (1) சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைபேசி : 9444607804

Edited and Published by Kalasa Ramalingam on behalf of Pudhu Vazhvup Pathippagam Pvt. Ltd., from Room No.22, II Floor, Door No.829, Anna Salai, Chennai-2. Cell:9444607804 Printed by: Tmt.GunavathyJeyaram at Ponmani Art Printers, 13,Theetharappan Street, Chennai-5.

*4-ம் பக்கத் தொடர்ச்சி*

இலக்கியம், இசை, நாட்டியம், சிற்பம் முதலான கலைகள் அனைத்துமே மனித சமுதாயத்திற்கு ஆன்மாவிற்கு மகிழ்வைத் தரக்கூடிய மிகப்பெரும் கலைகள் ஆகும். நமது தமிழ்நாட்டுச் சிற்பிகளின் கைவண்ணத்தில் வரலாற்று நினைவுச் சின்னங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன.

மண்டபப்பட்டுக் கற்கோவிலிலே காணப்படும் கல்வெட்டுகளிலிருந்து முதன்முதலாக மகேந்திரப் பல்லவ மன்னன் செங்கல், உலோகம், மரம் ஆகிய இவற்றைத் தவிர்த்து, கற்றளிகளால் கோவில்களை உருவாக்கிக் காட்டிய ஒரு தன்மை அந்தக் காலக்கட்டத்திலிருந்து தொடங்குகிறது. அப்போது சிற்பக்கலையின் பொற்காலம் தொடங்குகிறது.

மாமல்லபுரத்தின் இரதங்கள், அர்ச்சுனனின் தவக்கோலம் ஆகியவை சிற்பக்கலையினுடைய கட்டடக் கலையினுடைய சிறப்புகளை இந்த உலகத்திற்கு இன்றும் பறைசாற்றுகின்றன. நம்முடைய தொன்மையான இலக்கியங்களிலும் சிற்பக் கலையினுடைய குறிப்புகள் உள்ளன. சிற்பக்கலைஞர்கள் “நூலறி புலவர்” என்று நம்முடைய இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றார்கள். சமூகத்தின் ஆன்மாவை வெளிச்சத்திற்குக் கொண்டுவரக் கூடிய ஒரு கலைத் தொழிலினை சிற்பிகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு துணைவேந்தர் முனைவர் எம்.திருமலை பேசினார்.

**நூலாசிரியர் கரு.தட்சிணாமூர்த்தி ஸ்தபதி ஏற்புரையில் பேசியது வருமாறு:**

சிற்பக்கலைக்கு ஒரு நூலைப் படைக்க வேண்டும் என்ற எனது 30ஆண்டுத் தவம் இந்நூலில் வெளிப்பட்டிருக்கிறது. நமது உடல்களில் மரபணுக்களாய் வாழும் சரித்திரம் படைத்த படைப்பாளர்களின் ஆசியினால்தான் என்னால் இப்புத்தகம் எழுத முடிந்தது. இலக்கியங்களில், இசையில், மொழியில், சிற்பத்தில், தமிழர் பண்பாட்டில் ஒன்றியிருக்கும் இயற்கையின் கணக்கினைக் காதலித்ததில், கண்ணீர் மல்கிப் போனதில் இப்புத்தகத்தின் பக்கங்களை ஈரமாக்கியிருக்கிறேன். ஒளித்து வைக்கப்பட்ட உளியும் உளியின் வரலாறும் இன்று உங்கள் வீட்டுக்கதவைத் தட்டி எழுப்ப வந்திருக்கின்றன.

படைப்பாளர் நிலையைச் சொல்ல வந்திருக்கும் இந்நூலில் எத்துறையினர் ஆயினும் யாவரும் படைப்பாளர்களே என்பதை நிலை பிறழாது சொல்லியிருக்கிறேன்.

நமது பெருமைகளுக்குக் காரணமான படைப்பாளியின் ஐந்திற நூலினைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஐந்திறத்தில்தான் இயற்கையின் இயல்பில் காணும் மையக் கருத்துகள் காணப்படுகின்றன. அகத்தின் மையப்புள்ளியையும் புறத்தில் வடிக்கும் பொருட்களுக்கான மையப்புள்ளியையும் தொடர்புப்படுத்திச் சொன்ன அறிவியல் செய்திகள் கிடைக்கின்றன. காலவிசையில் துடிக்கும் ஒளிநூல் காலம், இடம் கணக்காய் திரிபுருதல் குறித்தான செய்திகள் கிடைக்கின்றன.

சிற்பி செதுக்கியது சிலைகளை மட்டுமல்ல எனவும், அவன் செதுக்கியது பண்பாட்டினை எனவும் இந்நூலில் சொல்லியுள்ளேன். சிந்துசமவெளியும், மாமல்லபுரமும், அமராவதிச் சிற்பங்களும் 15000 ஆண்டு வரலாற்றின் உச்சம் என்று சொல்லியிருக்கிறேன்.

பேச்சுக்கு மொழி, வீச்சுக்கு வாள், உணவுக்குக் கலப்பை, நூலுக்கு எந்திரம், வாழ்வுக்கு இல்லம், வணக்கத்திற்குக் கடவுள், கடலுக்கு மரக்கலன், பறப்பதற்கு விண்கலம், வணிகத்திற்கு நாணயம், அணிவதற்கு ஆபரணம், கடவுளர்க்கு ஆலயம், மன்னருக்கு அரியணை, அரண்மனை, கோட்டை, கோட்டைக் கதவுகள்...இன்னும் என்ன சொல்ல வேண்டும் படைப்பாளன் பெருமை சொல்ல...


மன்னவனை தேரில் – போரில் மையப்புள்ளியில் நிற்கவைத்து, போராளிகள் கைகளில் ஈட்டிகளைக் கொடுத்து, தரையில் கோடுகள் வரைந்து, நிற்க வைத்ததும், புள்ளிகள் வைத்து அதில் யானைகளை நிற்க வைத்ததும், குதிரைகளை நிற்க வைத்ததும், சக்ர வியூகங்களையும் பத்ம வியூகங்களையும் வரைந்து வைத்தவன் படைப்பாளியே. அவனது எண்ணங்களில் உதித்த கட்டங்களே கட்டடங்களாகவும் ஜியோமிதி வடிவங்களே புறவெளியில் பொருட்களாகவும் செய்து காட்டப்பட்டுள்ளன என்பதையும் இந்நூலில் சொல்லியுள்ளேன்.

மக்கள் தம் கண்களால் காண முடியாத படைப்புப் பேரதிசயத்தினை படைப்பாளிகள் தங்களது அகக் கண்களால் கண்டதையும் அதை வடிவமாக்கியதையும், பாமரரும் படித்துத் தெரிந்து கொள்ள இந்நூல் சிறந்த கையேடாக விளங்கும். எல்லோரும் படித்து அறிந்து கொள்ள எளிய நடையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. படைப்பாளருக்கும், படைப்புகளுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனும் நோக்கில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மண்ணிலும் கடலிலும் புதைந்திருக்கும் பல வரலாற்று உண்மைகள் வெளிவரவும் பாரதத்தின் பெருமையை மேன்மேலும் உயர்த்தவும் இளைஞர்கள் பல ஆய்வுகளை மேற்கொள்ளவும் இந்நூல் உற்ற துணைபுரியும்.

மரபுக்கலைகளுக்கான உலகளாவிய மையம் அமைத்து அதில் படைப்பு – மற்றும் படைப்பாளன் குறித்த ஆய்வுகள் மேற்கொண்டு பாரதத்தின் பெருமைகளை மேன்மேலும் தெரியச் செய்ய இது ஓர் தேசியப்பணியாக மலர ஆவண செய்ய வேண்டும் என மேதகு ஆளுநர் அவர்களிடம் வேண்டுகிறேன்.

இன்று பெருகிவரும் நவீன விஞ்ஞானம் ஆன்ம அறிவியலை நோக்கினால் அதில் பற்பல சாதனைகள் நிகழும் என்றும் புதிய சரித்திரம் பேசத் துவங்கும் எனவும் சொல்லியிருக்கிறேன். அந்நியக் கலைகளும், கலாச்சாரமும் ஊடுருவி விட்ட இந்நேரத்தில் நாம் நமது கலைகளையும் கலாச்சாரத்தையும் இம்மண்ணின் மரபுப் படைப்பாளர்களையும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை ஆகும். இவ்வாறு நூலாசிரியர் கரு.தட்சிணாமூர்த்தி ஸ்தபதி பேசினார்.

# நூல் மதிப்புரை




**பெருந்தச்சன் கரு. தட்சிணா மூர்த்தியின் உளி எழுத்துக்கள்** நூலைப் படிக்கையில் ஒரு கருத்து மீள்நினைவாயிற்று. அதாவது உண்மையும் சமூக அக்கறையும் கொண்ட எழுத்தாளரின் ஒரு படைப்பு நிலைநின்று ஒளிரவே செய்யும். செய்நேர்த்தி, சொல்நயங்கள் எனும் அவையும் அமையப் பெற்றால் இரட்டிப்பு மகிழ்ச்சி நல்கும். அத்தகைய சிறப்புடைய இந்நூல் இன்னும் வழுவழுப்பான உயரிய தாள், சிறந்த அச்சமைப்பு, பக்கத்துக்குப் பக்கம் உலகளாவிய கோபுரங்கள் – திருமேனிகள்–கற்றளிகள் – கலைச் சிற்பங்கள் ஆகியவற்றின் ஒளிப்படங்கள், கருத்துகள் செறிந்த மேற்கோள்கள் எனப் பல நலன்களும் ஒருங்கு சேர்ந்து உயர்ந்த படைப்பாக வெளிவந்திருக்கிறது.

உலகம் படைக்கப்பட்டது என்ற கருதுகோளின் வழி நின்று, உலகத்தில் உருவாக்கப்பட்டுள்ள கட்டடங்கள், பாலங்கள், அணைகள், அரண்மனைகள், கோவில்களானாலும் சரி, உழவு நெசவு மற்றும் தொழிலகங்களுக்குத் தேவைப் படும் கருவிகள் இயந்திரங்களானாலும் சரி, தேர், வண்டி, மரக்கலம், வானூர்தி போன்ற ஊர்திகளானாலும் சரி, ஓவியங்கள், சிற்பங்கள், சுதைகள், இசைக்கருவிகள் முதலிய கலைப்பொருள்களானாலும் சரி எல்லாவற்றையும் செய்து தருகிறவர்கள் அவர்கள் கொல்லர்கள், சிற்பிகள், ஸ்தபதிகள், தச்சர்கள், தொழிலாளர்கள் எனச் சிறப்புப் பெயர்கள் பெற்றிருந்தாலும் அவர்களைப் படைப்பாளிகள் எனப் பொதுப் பெயரிட்டு ஒரு குடையின் கீழ்க் கொண்டு வருகிறார் நூலாசிரியர். வாள், வில், ஈட்டி, அம்பு முதலிய படைக்கருவிகளைப் படைத்ததோடு பத்மவியூகம், சக்ரவியூகம் போன்ற போர் முறைகளை வகுத்தளித்தவர்களும் இவர்களே என்கிறார். இப்படைப்பாளிகளின் நலனுக்காக இவர்களுடைய அங்கீகாரத்துக்காக இவர்களை மேம்படுத்துவதற்காக நூல் நெடுகிலும் வாதிடுகிறார் இக்கலைச்செம்மல்.

Big Bang Theory, Matter, Energy ‘அறிஞர் ஐன்ஸ்டீனின் E = Mc2 கொள்கை, Higgsbasson என்னும் இறைவனின் துகள் எல்லாம் தென்னவனுக்குப் புதிய செய்திகள் அல்ல என்று கூறும் இவர் இயற்கைச் சீற்றத்தாலும் கடல்கோளாலும் இழந்த குமரிக்கண்டம், துவாரகா போன்ற பகுதிகளை ஆழமாக ஆய்வுக்கு உட்படுத்தினால் அது படைப்பாளனின் உழைப்பினைப் பேசும் என நம்புகிறார்.

மேசோனிக்(Masonic) இயக்கம் அரசன் சாலமன் காலத்திலேயே தோன்றி எகிப்து, ஸ்காட்லாண்ட், செருமனி முதலிய நாடுகளில் வளர்ந்து பரவியது. கட்டடக் கலைஞர்கள், சிற்பிகள், ஓவியர்கள், கல் வினைஞர்களை உள்ளடக்கி, அவர்கள் எவருக்கும் கட்டுண்டவர்களோ அடிமைகளோ அல்லர் எனும் பொருள் தோன்ற Freemasons என்ற அமைப்பினால் ஒழுங்கமைக்கப்பட்ட இயக்கம் புகழ்பெற்ற சகோதரத்துவ இணைப்பில் இயங்குகிறார்கள். Grand Lodge என்ற அமைப்பினால் ஒழுங்கமைக்கப்பட்ட இயக்கம் புகழ்பெற்ற கலைஞர்கள், அறிஞர்கள், பிரமுகர்களை Grand Masters ஆகக் கொண்டு அமெரிக்க அய்ரோப்பிய நாடுகளில் உயிர்ப்பான தொடர்பை நிலைநாட்டியுள்ளது.

இந்நூலில் கரு.தட்சிணாமூர்த்தியின் கவலை, ஏக்கம் விழைவு ஆகியவற்றை எண்ணும்போது நம்நாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் அத்தகு ஓர் அமைப்பு கட்டமைக்கப்பட்டால் இத்துறைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் பணியாளர்கள் தம் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்திக் கொள்வதிலும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதிலும் பெரிதும் பயன்பெறக் கூடும். தம் நூலில் கரு.தட்சிணாமூர்த்தி இவ்வகையிலான ஏற்பாட்டுக்கு ஆசைப்படுவதை உணர முடிகிறது. இன்றைய சூழலில் மரபுப் படைப்பாளர்கள் தமது தொழிலுக்கான வாய்ப்புகளை இழந்து நிற்கிறார்கள். வேறு தொழிலை நாடிச்செல்லும் அவல நிலை. எந்த ஒரு நாடும் வளம் பெற வேண்டுமானால் அந்நாட்டின் வரலாற்றுக்குக் காரணமானவனை, அம்மண்ணில் தோன்றியவனை உயரச்செய்வதற்கும், அவனது சிந்தனை வளத்தினை உபயோகப்படுத்துவதற்கும் முன்னுரிமை அளித்தல் அவசியம். புதிய பொருளாதாரக் கொள்கையால் பாதிப்படைந்த பண்டைய படைப்பாளர்களுக்கு முன்னுரிமை அளிப்பதும், கல்வி வேலை வாய்ப்பு பொருளாதாரம் இவற்றில் இவர்களை முன்னேறச் செய்வதும் நமது அத்தியாவசியப் பணி என்கிறார்.

**‘ஆய்வும் வகைப்படுத்தலும் வளர்ச்சியும் கருதி படைப்பாளர்களுக்கான ஆலோசனைக் குழுக்களும் மன்றங்களும் புதிய காலத்திற்குத் தேவை. அவை சுயநலமற்ற அமைப்புகளாக இருத்தல் அவசியம். மண்ணின் பெருமைக்குக் காரணமான அறிவியலைக் கண்ட படைப்பாளர்களையும் படைப்புகளையும் வாழச் செய்ய இங்கு உலகாவிய மரபுக் கலைகளுக்கான ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை மையம் அமைக்க வேண்டும்’** என்பது இவரது விழைவு. இவருடைய கலையறிவையும் ஆற்றலையும் அறிவியல் சமூகப் பார்வையையும் நோக்கு கையில் ஃப்ரீமேசன் இயக்கத்தின் Grand Master பட்டத்துக்குரியவர்களுக்கு இணையானவராக இவரைக் கருத வேண்டும்.

‘கட்டடக் கலையே கணக்கியல் உச்சி’, ‘கவிஞன் வரிவடிவத்தில்தான் பேசமுடியும் ஆனால் சிற்பி முப்பரிமாண அதிசயத்தில் பேசுவான்’, ‘சிற்பியே சிற்பமாகிறான்’ போன்ற மேற்கோள்களை எடுத்தாண்டு, மயனுக்கும் தம் குரு கணபதி ஸ்தபதிக்கும் மரியாதை செய்துள்ளார்.

பளப்பளப்பான தாள்-நிரம்பப் படங்கள் என ஒரு Coffee Table புத்தகம் போன்ற தோற்றத்தில் இருந்தாலும் உள்ளடக்கத்தில் கருத்துச் சுரங்கமாக உள்ளது இப்படைப்பு.

“உளி எழுத்துக்கள்” கற்பதற்கும் பாதுகாப்பதற்கும் உரிய நூல். கரு.தட்சிணாமூர்த்தி போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரிய படைப்பாளர்.

**- வெ. பெருமாள்சாமி**

இந்நூலின் விலை : **ரூ.120.00**

பக்கங்கள் : **128**

கிடைக்குமிடம்

**ஓய்.ஏ. பதிப்பகம்**

60, விவேகானந்தர் தெரு,
காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93.
செல் : 98409 96745, 94443 88563